# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8030830

1. District : மாவட்டம் ஈரோடு   PS: காவல்நிலையம் ல.ஒ.க.பிரிவு ஈரோடு   Year: ஆண்டு 2017   FIR No. மு.த.அ. எண் 6/AC/2017   Date: நாள் 01.12.2017

2. (i) Act சட்டம்: CrPC.   Sections பிரிவுகள்: 102

   (ii) Act சட்டம்: P.C. Act 1988   Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(d)

   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் வியாழக்கிழமை   Date from : நாள் முதல் —   Date to : நாள் வரை 30.11.2017

   Time Period : நேர அளவு —   Time from : நேரம் முதல் 17.55 Hrs   Time to : நேரம் வரை 23.00 Hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.12.2017   Time : நேரம் 11.00 Hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD Vol IV   Time : நேரம் 11.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 20 கி.மீ. மேற்கு

   Beat Number : முறைக் காவல் எண் —   (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம், பெருந்துறை, ஈரோடு மாவட்டம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் —   District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் [illegible]   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு   (d) Nationality : நாட்டினம் இந்தியன்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

   (f) Occupation தொழில் துணை ஆய்வர் [illegible] அலுவலர்   (g) Address : முகவரி கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   கோ. அருணா, சார்பதிவாளர், பெருந்துறை சார்பதிவாளர் அலுவலகம், பெருந்துறை ஈரோடு மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — தாமதமில்லை. —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது :-

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ……—……… Rank ……—…… to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………—……………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …… பதவி …… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு …… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

1.12.17

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

01.12.2017 at 16.00 Hrs.

Name: பெயர் S. ……
Rank: நிலை ……

<u>சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

இன்று 01.12.2017ம் தேதி 11 மணிக்கு கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களின் துணை ஆய்வுக்குழு அலுவலர், திருமதி.சி.வி.லாவண்யா அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

அனுப்புநர்: சி.வி.லாவண்யா, துணை ஆய்வுக்குழு அலுவலர்,கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள். பெறுநர்: காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, ஈரோடு மாவட்டம். ஐயா, 30.11.2017ம் தேதி ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் இயங்கிவரும் பெருந்துறை சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார்பதிவாளர் திருமதி.கோ.அமுதா மற்றும் அலுவலக பணியாளர்கள் பத்திரம் பதிவு செய்தல், பத்திர நகல்கள் வழங்குதல், வில்லங்க சான்று வழங்குதல் மற்றும் களப்பணி போன்ற அலுவலக பணிகளை செய்வதற்கு கையூட்டாக நேரடியாகவும், பத்திர எழுத்தர்கள் மூலமாகவும், மற்றும் இடைத்தரகர்கள் மூலமாகவும் கையூட்டாக பணம் பெறுவதாகவும், அதை மாலையில் அலுலவகத்தை விட்டு வெளியில் செல்லும்போது பெற்றுக்கொள்வதாகவும், ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக்கண்காணிப்பாளருக்கு கிடைத்த நம்பத்தகுந்த தகவலை நான் உறுதி செய்துகொண்டு, நான் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.எஸ்.புஷ்பராஜ் மற்றும் காவல் ஆய்வாளர்கள் பார்ட்டியுடன் 30.11.2017ம் தேதி மாலை சுமார் 5.55 மணிமுதல் இரவு 11 மணிவரை பெருந்துறை சார்பதிவாளர் அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்யப்பட்டது. இந்த தணிக்கையின் போது TN 33 Q 650 என்ற மாருதி 800 கார் அலுவலகத்தின் முன்பு இருந்து புறப்பட தயாரானதை சந்தேகத்தின் அடிப்படையில் நிறுத்தி விசாரித்த போது, வாகனத்தின் முன்பகுதியின் இடதுபுற இருக்கையில் ஒரு கட்டைப்பையில் சில ஆவணங்களுடனும், கைப்பையுடனும் அமர்ந்திருந்த பெருந்துறை சார்பதிவாளர் திருமதி.கோ.அமுதா அவர்களை விசாரித்த போது அவர் பதட்டமடைந்தார். மேற்படி வண்டியை நிறுத்திவிட்டு விசாரித்த போது, சார்பதிவாளர் திருமதி.கோ.அமுதா அவர்கள், இன்று தான் வேலையை முடித்துவிட்டு ஒருசில ஆவணங்களை பையில் எடுத்துக்கொண்டு வீட்டிற்கு சென்று அலுவலக வேலைகளை கவனிப்பதற்காக, தன் மகன் திரு.சுஜாகரன் உடன் புறப்பட்டதாக கூறினார். மேற்படி பையில் இருந்த ஆவணங்களுடன் அலுவலகத்திற்குள் வருமாறு அவரை கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி சார்பதிவாளர் அவர்கள் தன்னுடைய அலுவலகத்திற்குள் வந்து தனது இருக்கையில் அமர்ந்து பைகளில் இருந்த ஆவணங்களை தணிக்கை குழுவினருக்கு மேஜையின் மீது எடுத்து வைத்து காண்பித்தார். அந்த சமயத்தில் அலுவலகத்தில் இருந்த மற்ற நபர்களை அந்தந்த இடத்தில் அப்படியே இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. சார்பதிவாளர் திருமதி.கோ.அமுதா அவர்கள் தான் வைத்திருந்த கட்டைபையில் இருந்து சான்றொப்பமிடப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் 5 கத்தைகளாக

1.12.17

பணம் ரூ.43,600/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். பணத்தை பற்றி அவரிடம் விசாரித்த போது பத்திர எழுத்தர்கள் கருணாகரன் மற்றும் மனோகரன் ஆகிய இருவரின் அலுவலகத்திலிருந்து வந்த பத்திரப்பதிவுகள் செய்தது சம்மந்தமாக, அவர்கள் இருவரும், தனக்கு இன்று மாலை வீட்டுக்கு கிளம்பும்போது அன்பளிப்பாக கொடுத்தவைகள் என்று கூறினார். எனவே மேற்படி கையூட்டு தொகை மொத்தம் ரூ.43600/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அலுவலகத்திலிருந்த 3 தனிநபர்களில் திருமதி.சாந்தி என்பவர் கம்ப்யூட்டர் அறையினுள் அமர்ந்திருந்தவரை தணிக்கையின் போது குழுவினர் விசாரிக்க சென்ற போது எச்.பி. பிரின்டர் மெசின் அருகில் டேபிள் மீது 2 கத்தையாக பணம் ரூ.2450/- இருந்தது தெரியவந்தது. மேற்படி தொகைகள் பற்றி அவரிடம் விசாரித்த போது, அவர் சரியான முகாந்திரம் சொல்லாததால் விசாரணைக்காக ரூ.2450/- கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடம் விசாரித்த போது, தான் கடந்த இரண்டு வருடங்களாக அந்த அலுவலகத்தில் வேலை செய்து வருவதாகவும், அதற்கு சார்பதிவாளர் திருமதி.கோ.அமுதா அவர்கள் தினமும் 500 ரூபாய் கூலியாக தருவதாகவும், தற்போது கடந்த ஒருவாரத்திற்கு முன்பு டி.சி.எஸ் கம்பெனி மூலம் டேட்டா என்ட்ரி ஆபரேட்டராக பணி நியமனம் செய்யப்பட்டு அந்த அலுவலகத்தில் பணியாற்றி வருவதாகவும் கூறினார். சார்பதிவாளரிடம் அவருக்கான வருகைப்பதிவேட்டை பற்றி கேட்டபோது, இன்னும் அவருடைய வேலைக்கான உத்தரவு வரவில்லை என்றும், எனவே வருகை பதிவேடு தற்போது வரை பராமரிக்கவில்லை என்றும் தெரிவித்தார். கைப்பற்றப்பட்ட தொகைகள் குறித்து சார்பதிவாளரிடமும், திருமதி.சாந்தி அவர்களிடமும் தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. இந்த தணிக்கையின் போது 30.11.2017அன்று அலுவலகத்தில் பதிவான ஆவண விபரங்கள் மற்றும் வசூலான தொகைகள் குறித்து சார்பதிவாளர் திருமதி.கோ.அமுதா அவர்களிடம் கணிணி பட்டியல் பக்கம் 1 முதல் 28 வரை சான்றொப்பமிட்டு பெறப்பட்டது. அலுவலக வருகை பதிவேடு 2017ம் வருட நவம்பர் மாதத்திற்குரியதன் சார்பதிவாளர் அவர்களின் சான்றொப்பமிட்ட நகல் விசாரணைக்காக பெறப்பட்டது. மேலும் பக்கம் 1 முதல் 39 வரை அடங்கிய தனிநபர் பண இருப்பு பதிவேடு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சார்பதிவாளரிடம் விசாரித்த போது, படைவீரர் கொடிநாள் நிதி வசூலோ அல்லது சிறுசேமிப்பு இலக்கோ தனது அலுவலகத்திற்கு தற்போது எதுவும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார். 30.11.2017ம் தேதி வங்கியில் பணம் இருசால் செய்யப்பட்ட பதிவேட்டை பார்வையிட்ட போது 30.11.17ம் தேதி 29.11.17 வரையிலான வசூல் செய்யப்பட்ட தொகை வங்கியில் இருசால் செய்யப்பட்டிருந்தது. இந்த திடீர் தணிக்கை சம்மந்தமான முழுமையான விபரங்கள் அனைத்தும் எனது நடவடிக்கைகள் ந.க எண் 271/2017/ஐ1, நாள் 30.11.2017 ஆக கணிணியில் 30.11.2017ம் தேதி இரவு 7.30 மணி முதல் 11 மணி வரை தட்டச்சு செய்து தயார் செய்து முடிக்கப்பட்டது. தணிக்கை சமயத்தில் ஆஜரில் இருந்த சார்பதிவாளர் திருமதி.கோ.அமுதா

1.12.17

மற்றும் தனிநபர் திருமதி.சாந்தி ஆகியோரிடம் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், சார்பதிவாளர் திருமதி.கோ.அமுதா அவர்களிடம் கைப்பற்றப்பட்ட தொகை ரூ.43600/- மற்றும் தனிநபர் திருமதி.சாந்தி அவர்கள் அமர்ந்திருந்த இருக்கையின் முன்பு இருந்த டேபிளில் வைக்கப்பட்டிருந்த தொகை ரூ.2450/- ஆகியவற்றை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். மேற்கண்ட நிகழ்வு குறித்து உண்மை நிலை அறிய தக்க புலன்விசாரணை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு கையொப்பம்-- (சி.வி.லாவண்யா) துணை ஆய்வுக்குழு அலுவலர், கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள். இப்படிக்கு (கையொப்பம்)- (சி.வி.லாவண்யா), துணை ஆய்வுக்குழு அலுவலர், கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள். இடம்: ஈரோடு, நாள்: 01.12.2017, இணைப்பு: துணை ஆய்வுக்குழு அலுவலர், கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் அவர்களின் நடவடிக்கைகள் ந.க எண் 271/2017/ஜ1, நாள்: 30.11.2017, ஆவணங்கள் மற்றும் பணம் மொத்தம் ரூ. 46,050/-

Sir,

Received the complaint and enclosures and registered a case in Erode Vigilance and Anti-Corruption Crime No 6/AC/2017 u/s 102 CrPC and sec 13(2) r/w 13(1) (d) of PC Act 1988 on 01.12.2017 at 11.00hrs. (xxxxx) (S.Pushparaj), Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Erode.

Original FIR along with the original typed complaint of Tmt.C.V.Lavanya, Dy.Inspection Cell Officer, Coimbatore, Erode, Thiruppur and the Nilgiris, is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and copy of FIR submitted to Director, Vigilance and Anti-Corruption, Chennai.

1.12.17
DS.P. VAC. Erode.